50 killed in LTTE-TELO

LTTE, TELO seek mutual liquidation

இலங்கையில் விடுதலைப்புலிகள் மோதல்

துப்பாக்கி சண்டையில் 100 பேர் சாவு!

**Faction fighting claims 100 lives in Lanka**

COLOMBO, May 1 (PTI) The Liberation Tigers of Tamil Eelam (LTTE) captured

However, in Colombo a National S——y Ministry spokesman denied

ஈழப் போராளிகளுக்குள் மோதல்:

சிறீசபாரத்தினத்தை சிறை பிடித்தனர் பிரபாகரன் அணியினர்!

**TELO leader, two aides shot dead**

Conflicting claims by TELO, LTTE

The Tamil Eelam Liber... (TELO) leader, Sri Sabaratn... lieutenants were killed when members of the

TELO-LTTE clash will

Tigers' bid to take over Eelam struggle

# விடுதலைப்புலிகள்-டெலோ மோதல். உண்மை விளக்கம்

Liberation Tigers Of TAMIL EELAM

சமீபத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் (TELO) மத்தியில் முரண்பாடு முற்றி பெரியதொரு ஆயுத மோதலாக வெடித்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்த இந்த ஆயுத மோதலுக்கு பல காரணங்கள் உண்டு. ''ஒரே இலட்சியத்தைக்கொண்ட இரு விடுதலை இயக்கங்கள் இராணுவ மேலாதிக்கத்திற்காக சகோதரத்துவ யுத்தத்தில் குதித்தன'' என்ற கணிப்பீடு மிகவும் தவறானதாகும். இலட்சியம், செயற்பாடு, சித்தாந்தம் என்ற ரீதியில் இரு இயக்கங்களுக்கும் பாரிய வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடு தவிர்க்கமுடியாத முரண்பாடாகப் பரிணமித்தது. சுதந்திரத் தமிழீழம் என்ற இலட்சியம், அதனை அடைய ஆயுதப் போராட்டம் என்ற செயல்முறை, சோசலிச தத்துவம் என்ற விஞ்ஞானக் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் நெறிப்படுத்தப்பட்டது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். பத்து வருடங்களுக்கு மேலான போராட்ட வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு தேசிய விடுதலை இயக்கமாக வளர்ச்சி கண்ட எமது இயக்கம் தமிழீழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறது. களத்தில் அற்புதமான தியாகங்களைப் புரிந்து, அசைக்கமுடியாத மக்களின் பாதுகாப்பு அரணாக நிலைத்துநிற்கிறது எமது இயக்கம். சிங்கள இனவாத எதிரிக்கும் சிம்ம சொப்பனமாக விளங்குகிறோம். விடுதலைப் புலிகள் ஒரு முற்போக்கான, புரட்சிகர போராட்ட சக்தி, ஏகாதிபத்திய நாசகார சக்திகளின் எதிரி. அதே சமயம், டெலோ அமைப்பு எம்மைப்போல ஒரு மக்கள் விடுதலை இயக்கமாக அமையப்பெறவில்லை. எந்தவித புரட்சிகர சித்தாந்தத்திலோ வேலைத்திட்டத்திலோ வளர்க்கப்படவில்லை. மாறாக, ஆயுதம் தாங்கிய ஒரு மக்கள் விரோத சக்தியாகவே இயங்கிவந்தது. விடுதலை என்ற போர்வையில் மக்களைச் சுரண்டி, மக்களைச் சூறையாடி, மக்களை மிரட்டித் துன்புறுத்தி ஒரு சமூக விரோத கும்பலாகவே டெலோ இயக்கம் செயல்பட்டுவந்தது. இந்த அடாவடித்தனம் மக்களோடு மட்டும் நின்றுவிடாது உண்மையான போராளிகளான விடுதலைப் புலிகள்மீதும் தாவியது. இதனால் எமக்கும் டெலோவினருக்கும் மத்தியில் முரண்பாடு தோன்றியது. இந்த முரண்பாடு முற்றி தவிர்க்கமுடியாத ஒரு ஆயுத மோதலாகக் குமுறியது.

இந்த ஆயுத மோதலுக்கான உடனடியான காரணிகளையும் வரலாற்று ரீதியாக விடுதலைப் புலிகளுக்கும் டெலோ இயக்கத்தினருக்கும் மத்தியில் நிலவிய உறவுகளையும் முரண்பாடுகளையும் இந்த பிரசுரம் தெளிவாக எடுத்து விளக்குகிறது. டெலோவின் தோற்றம், வளர்ச்சி, செயல்முறை பற்றியும் டெலோவினரை நிராயுத பாணிகளாக்க நாம் நிர்பந்திக்கப்பட்ட காரணங்களையும் இங்கு தெளிவு படுத்துகிறோம்

ஒரு முற்போக்கான புரட்சிகர சக்திக்கும் ஒரு பிற்போக்கான எதிர்ப் புரட்சி சக்திக்கும் மத்தியில் முரண்பாடு தோன்றுவது வரலாற்று நியதி. உலக தேசிய விடுதலைப் போராட்டங்களில் இது சகஜமான நிகழ்வு. இந்த முரண்பாடுகள் ஆயுத மோதலால் தீர்வு காணப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது.

நாம் ஒற்றுமை மூலம், புரிந்துணர்வு மூலம், சமரச பேச்சுகள் மூலம் இந்த முரண்பாடுகளை களைய முயன்றோம். நாம் அவ்விதம் முயன்றபோதெல்லாம் ஆயுதம் எமக்கெதிராக நீட்டப்பட்டது. வன்முறை பிரயோகிக்கப்பட்டது. நிலைமை கட்டுமீறி எம்மை அழிக்க முற்பட்டவர்கள் மீது நாம் ஆயுத நடவடிக்கையை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டோம். எமது நோக்கம் டெலோவை நிர்மூலமாக்குவதல்ல. அவர்களை நிராயுதபாணிகளாக்குவதே. இந்த ஆயுத மோதலில் எம்மை எதிர்த்து போரிட்ட பல டெலோ இளைஞர்களும் டெலோ தலைவர் சிறி சபாரத்தினமும் உயிரிழந்ததையிட்டு வருந்துகிறோம். ஆனால் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவும் தமிழீழ சமூகத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டவும் இந்த நடவடிக்கை தவிர்க்க முடியாததாகிவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அக்கறையும் ஆர்வமும்கொண்ட அன்பர்கள் அனைவரும் எமது நிலையை புரிந்து கொள்வார்களெனத் திடமாக நம்புகிறோம்.

அரசியல் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழீழத்தில் கடந்த சில நாட்களாக தமிழீழ விடுதலை இயக்கத்தினருடன் (டெலோ) நாம் மோதலில் ஈடுபட வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்ட காரணத்தை நாம் வேதனையோடு வெளியிட வேண்டியிருக்கிறது.

இலட்சிய நோக்கையும் ஒழுங்கு கட்டுப்பாட்டையும் அடித்தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வரும் எமது இயக்கத்தின் வளர்ச்சி கண்டு பொறாதவர்கள் பொறாமை உணர்வினால் ஆத்திரமுற்று அறிவிழந்து! எமது ஆதரவாளர்களைத் தாக்க முற்பட்டனர்.

எமது இயக்கத்தின் பிரதேச பொறுப்பாளர்களாகச் செயல்பட்ட இருவரைக் கடத்திச் சென்றனர்

கடத்தப்பட்டவர்களை விடுவிக்கப் பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற, எமது மூத்த உறுப்பினர்களில் ஒருவரான காப்டன் லிங்கத்தைச் சுட்டுக்கொன்றனர்.

தொடர்ச்சியாகப் பல மக்கள் விரோத அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தமிழீழப் போராட்டத்தின் மீதே மக்களுக்கு வெறுப்புணர்வு ஏற்படும் வண்ணம் செயல்பட்டனர்.

இத்தகைய காரணங்களால் எமது இயக்கம் டெலோவிற்கு பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டது.


கடந்த 27ம் தேதி அதிகாலை கடற்படையினருக்கும் எமக்கும் கடல்நடுவே நடந்த சண்டையில் எமது இயக்க உறுப்பினர்கள் சிலர் வீரமரணமடைந்தனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் மேஜர் அருணா. அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக யாழ்குடாநாட்டு மக்கள் எமது தூண்டுதலின்றியே 28ம்தேதி ஹர்த்தாலை அறிவித்து வெற்றிகரமாக நடத்தினர். நான்கு நாட்களுக்கு முன் (24ம் தேதி) கடற்படையுடன் ஏற்பட்ட மோதலில் **கடலில் 11 வீரர்களை** டெலோ இழந்தது. அவர்களது மறைவுக்கு **அஞ்சலி செலுத்தாத** மக்கள் விடுதலைப்புலிகளுக்கு மட்டும் ஆதரவாக இருப்பதைக் கண்டு புழுங்கிய டெலோவினர் 29ம் தேதி ஹர்த்தால் மேற்கொள்ளும்படி பொதுமக்களைக் கோரினர். ஆனால் மக்கள் டெலோவின் கட்டாய ஹர்த்தாலை ஏற்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த டெலோவினர் கல்வியங் காட்டுப் பகுதியில் தாம் ஹர்த்தால் அறிவித்த அன்று விடுதலைப்புலிகள் படத்தை வைத்து வீரவணக்கம் செலுத்திய மக்களைப் பொறாமை உணர்வால் உந்தப்பட்டு கண்மூடித்தனமாகத் தாக்கினர்..

மேலும் அப்பகுதியில் எமது இயக்கத்தின் அரசியல் வேலைக்கு பொறுப்பாக இருந்த மேஜர் பசீர், லெப்டினன்ட் முரளி ஆகியோரை விசாரணைக்கு என கடத்திச் சென்றனர். இச் செய்தியைக் கேள்விப்பட்ட எமது காப்டன்களில் ஒருவரான லிங்கம், பிரச்சனையைப் பேசித் தீர்க்கும் நோக்கத்துடன் டெலோ முகாமுக்கு சென்ற போது எவ்விதக் காரணமுமின்றி சுட்டுக் கொல்லப்பட்டார்.





மேஜர் அருணா.



காப்டன் லிங்கம்

எமது இயக்க காப்டனைச் சுட்டுக் கொன்றதைத் தட்டிக் கேட்கவும், கைதான இரு வீரர்களை விடுவிக்கவும் நாம் உடனடியாகத் தாக்குதல் தொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது.

தமிழீழப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு எமது இயக்கமே காரணம். இதுவரை தமிழீழத்தில் அரச படைகளுக்கெதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஒரு சிலவற்றைத் தவிர அனைத்தையும் எமது இயக்கமே செய்துள்ளது. இதற்காக இருநூறுக்கும் மேற்பட்ட எமது வீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். தொடர்ச்சியான தாக்குதல்களில் இயக்கம் ஏராளமான பொருளிழப்புகளையும் எதிர் நோக்கியுள்ளது. கடந்த நான்கு மாதங்களில் மட்டும் ஆயுதப்படைகளைச் செயலிழக்கச் செய்யும் தாக்குதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட எமது வீரர்கள் உயிரிழந்துள்ளனர். வடக்கில் சிங்கள ஆட்சி யந்திரத்தை செயலிழக்கச் செய்து இராணுவத்தை முகாம்களை விட்டு வெளியேற விடாமல் முடக்கி வைத்திருக்கிறது எமது இயக்கம்.

போலிஸ் நிர்வாகம் முற்றாக அழிக்கப்பட்டபின் தமிழ்ப் பகுதியில் சமூக விரோதச் செயல்கள் தலைதூக்கின. பொதுமக்களின் சொத்துகள் களவாடப்படுதல், வாகனங்கள் கடத்தல், வழிப்பறி, பயமுறுத்தல், கோவில் கொள்ளை மற்றும் கொலைகளும் அதிகரித்தன. ஆரம்ப காலத்தில் இச் செயல்களில் ஈடுபட்ட சமூக விரோதிகளுக்கு எமது இயக்கம் மிக உயர்ந்த பட்ச தண்டனையாக மரணதண்டனையை நிறைவேற்றி, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக மின்கம்பத்தில் கட்டியது. இதைத் தொடர்ந்து வடபகுதியில் சில காலம் சமூக விரோதச் செயல்கள் மட்டுப்பட்டிருந்தன.

போராளிகள் என்று கூறிக்கொண்டு சிலர் வாகனக் கடத்தல், கொள்ளை, கொலை போன்றவற்றை நடத்தத் தலைப்பட்டனர். இவர்கள் சில இயக்கங்களின் உறுப்பினர்கள் என்பதால் அந்த இயக்கத் தலைவர்களுக்குப் பல தடவைகள் சுட்டிக்காட்டியும் எச்சரித்தும் அராஜகச் செயல்கள் தொடர்ந்தது. இவர்கள் எமது பாதுகாப்பு அரணுக்குள், இராணுவத்திடமிருந்து எந்த ஆபத்தையும் நேரடியாக எதிர் நோக்காத நிலையில் சுகமாக இருந்து கொண்டிருந்தனர். இவர்களால் போராட்டத்திற்கு எவ்வித உபகாரமும் இல்லையென்றாலும் மக்களுக்கு உபத்திரவம் கொடுப்பதில் முன்நின்றனர்.

சமூக விரோதச் செயல்களில் சிறுசிறு குழுக்களாகப் பலர் இறங்கிய போதும், எல்லோருக்கும் மேலாக டெலோவினரே பரந்த அளவில் இச் செயல்களில் ஈடுபட்டனர். டெலோவின் வடமராட்சிப் பொறுப்பாளராக இருந்த தாஸ் என்பவருடைய அராஜகச் செயல்கள் பொதுமக்களோடு மட்டும் நில்லாது எமது இயக்கத்தவர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டது. இதை எமது தலைவரே நேரடியாக சபாரத்தினத்துக்கு தோழமை உணர்வோடு முறையிட்டும் பயனில்லை: தாஸ் 'களங்கமற்றவன்', 'கட்டுப்பாடானவன்' என்று சிறி நற்சான்றிதழ் வழங்கியதோடு எமது இயக்கம் தான் அவரிடம் தப்பாக நடந்து கொண்டது என்றும் கூறினர். அதன்பின் தாஸின் எல்லை மீறிய செயல்களால் எமது வீரர் ஒருவர் சுடப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

தாஸுக்கும் சபாரத்தினத்துக்கும் இடையே சிக்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, உட்கட்சிப்பூசல் காரணமாகத் தம் தலைமைப் பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சினர் சிறி. கடந்த மார்ச் மாதம் தமிழீழத்திற்கு வந்த சிறி தாஸை பேச்சுவார்த்தைக்கென அழைத்து நயவஞ்சகமாக மருத்துவமனையில் வைத்து கொலை செய்தது மட்டுமன்றி, தாஸ் 1984ம் ஆண்டிலிருந்து புரிந்த குற்றங்கள் பற்றி உத்தியோகபூர்வமான குற்றப்பத்திரிகை ஒன்றை மக்கள் முன் சமர்ப்பித்தார்.

1. ஏழு சாராய லாரிக் கொள்ளைகள்.
2. யாழ் கூட்டுறவு சிகரெட் வான் கொள்ளை.
3. லாரிகளில் (தமிழ் மக்களுக்கு) வந்த உணவுப் பொருட்கள் கொள்ளை.
4. கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் லேத் இயந்திரக் கொள்ளை.
5. சுழிபுரம் இராஜசுந்தரம் கொலை.
6. மல்லாகம் தேசிக நாதன் கொலை.
7. கிளிநொச்சி B.M.C. ஊழியர் கொலை.
8. கல்வியங்காடு ரஜனி கொலை.
9. S.V.M. சீனி லாரி இரண்டு கொள்ளை.
10. (பொதுமக்கள் பாவனைக்கு வந்த) பல டீசல், பெட்ரோல் லாரிகள் கொள்ளை.
11. சிவகடாட்சம், செல்லப்பா, மருகன் சிறி ஆகியோரைக் கடத்திப் பணம் பறித்தது.

இது போன்ற இன்னும் பல என்று டெலோவின் அரசியல் பிரிவு தாஸை தாம் கொன்றதற்குக் காரணம் கூறியது.

இதற்கு மாறாக தாஸ் குழுவினர் சிறிசபாரத்தினம் கும்பல் செய்த சமூக விரோதச் செயல்கள் என்று ஒரு நீண்ட பட்டியலை அறிவித்தனர்.

1. தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகிய கூட்டணி எம்.பிக்கள் கொலை.
2. தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் கொள்ளை.
3. துர்க்கையம்மன் கோவில் கொள்ளையை நேரில் கண்ட ஏழாலை வாசியான சின்னவன் அடித்துக்கொலை.
4. திருக்கேதீஸ்வரம் கோயில் கொள்ளை, கோயில் நிர்வாகி மீது தாக்குதல்.
5. சுழிபுரம் துரையப்பா வீடும் கடையும் கொள்ளை.
6. லலிதா நகை மாளிகை கொள்ளை.
7. அம்பலவாணர் நகை மாளிகை கொள்ளை.
8. மகாலட்சுமி நகை மாளிகை கொள்ளை.
9. காரை நகரில் இருவீடுகளில் கொள்ளை. (ஒரு வீட்டுக்காரரைத் தாக்கிக் கிணற்றுக்குள் போட்டனர்.)
10. சாவகச்சேரி சின்னத்தம்பி & Co உரிமையாளர் வீட்டில் கொள்ளை அத்துடன் அங்கு இருந்த பெண்ணுடன் தகாத முறையில் நடந்தனர்.
11. பிறவுண் ரோட்டில் உள்ள மின்சார சபை அலுவலகத்தில் இருந்த 1 1/2 லட்சம் ரூபாய் பெறுமான டிரான்ஸ்பார்மரைக் கொள்ளையடித்து அதிலிருந்த உலோகப் பொருட்களைப் பழைய உலோக வியாபாரிக்கு ரூ. 15,000க்கு விற்றது.
12. கல்வியங்காடு நீதிபதி அமிர்தலிங்கம் வீட்டில் கொள்ளையடித்து அவரைக் கொலை செய்தது.
13. சிறுப்பிட்டி பப்பன் கடையில் இருந்த பொருட்கள் எல்லாம் கொள்ளை.
14. சிறுப்பிட்டியில் டெலோவின் அராஜகத்தை எதிர்த்து நடத்திய பொதுமக்களைத் தாக்கியது.

என்று அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

டெலோவின் தலைமைப் பொறுப்பில் இருந்த இவர்களது மக்கள் விரோத நடவடிக்கைகள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. கடத்தப்பட்ட வாகனங்களும், கொள்ளையடிக்கப்பட்ட தனியார் வீடுகளும் கணக்கிலடங்காதவை. டெலோவினர் தாங்கள் செய்ததாக வெளியிட்ட அராஜகங்கள் மட்டுமே மேலே தரப்பட்டுள்ளன.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரனைத் தலைவராகக் கொண்ட தமிழீழ இராணுவத்தினர் கிழக்கு மாகாணத்தில் களுவாஞ்சிக்குடி வங்கியில் இருந்து எடுத்த நகைகளில் ஒரு பகுதியை (சுமார் 1 1/2 கோடி ரூபாய் பெறுமதியானது) அவர்களிடம் துப்பாக்கியைக் காட்டி டெலோவினர் மிரட்டிப் பறித்தெடுத்தனர்.

இவை மட்டுமல்லாது, டெலோவினர் பொது இடத்தில் பட்டப்பகலில் பகிரங்கமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்லவும் தலைப்பட்டனர். இவர்களது அராஜகம் தமிழகத்திற்கும் விரிந்தது. திருச்சி அகதிகள் முகாமிற்குள் பகிரங்கமாக நுழைந்து அகதிகளைக் கடத்திச் சென்று கொன்றனர். இவர்களிடம் பயிற்சிக்கு வந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழீழ இளைஞர்கள் இவர்களது 'ஒழுங்கு நடவடிக்கையின்' கீழ் தமிழக மண்ணில் புதைந்தனர்.

எமது இயக்கம் ஏராளமான பொருளிழப்பு உயிரிழப்புகளுக்கு உள்ளாகியும் இடைவிடாத உக்கிரமான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சிங்கள ஆட்சி எந்திரத்தை செயலிழக்க வைத்திருக்கிறது. இச் சந்தர்ப்பத்தைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அராஜக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைத் தண்டிக்கும் உரிமை எமக்குண்டு. இந் நிலையில் இவர்களை முளையிலேயே கிள்ளாது வளர விட்டால் எதிர்காலத்தில் ஏராளமாகக் களையெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்படும். அதைத் தவிர்ப்பதற்காகவே தமிழீழ மக்களின் ஆதரவுடன் துணிந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டோம்.

இந்த சமூகவிரோதிகளின் நடவடிக்கைகளை நேரில் அனுபவித்து வந்த தமிழீழ மக்களுக்கு எமது செயலின் அவசியமும், அவசரமும் நன்றுகப்புரியும்.

---

## 13.5.86 அன்று எம்மால் வெளியிடப்பட்ட அறிக்கை

UNI நிருபர் யாழ்ப்பாணத்தில் சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'விடுதலைப்புலிகள் அட்டகாசம் புரிந்தனர்' என்று வெளியிட்ட செய்தியை மறுக்கிறோம். எமது இயக்கத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் கெட்ட நோக்கத்தோடு அந்தச் செய்தி திரித்தும், மிகைப்படுத்தியும் கூறப்பட்டுள்ளது.

சரணடைந்த டெலோ உறுப்பினர்களை எமது வீரர்கள் சுட்டுக் கொன்றார்கள், உயிரோடு கொளுத்தினார்கள் என்பதை முற்றாக மறுக்கிறோம். சரணடைந்த அனைவரையும் நாம் விடுதலை செய்து விட்டோம். டெலோ உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்த இடங்களிலேயே மரணங்கள் சம்பவித்தன. 'மனிதாபிமான மற்றும்', 'மிருகத்தனமாகவும்' விடுதலைப்புலிகளின் கெரில்லாக்கள் நடந்து கொண்டார்கள் என்ற செய்தியில் சற்றும் உண்மையில்லை. அந்த நிருபர் எதையும் நேரில் காணவில்லை. டெலோ ஆதரவாளர்களை மட்டுமே சாட்சிகளாக நினைத்து பாரபட்சமான வாக்குமூலங்களை எடுத்துள்ளார்.

செய்தியில் கூறப்பட்டபடி EPRLF இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் பூரண வெற்றியல்ல. உள்ளூர் பத்திரிகைச் செய்திகளின்படி — சில கடைகளே மூடப்பட்டிருந்தன. கல்விக் கூடங்கள் பஸ் சர்வீஸ்கள் வழக்கம்போல் நடந்தன. யாழ்குடா நாட்டில் எமது நடவடிக்கையை மக்கள் எதிர்க்கவில்லை என்ற உண்மையை நியாயப்படுத்தவே டெலோ தரப்பில் இறந்தவர்களில் பெரும்பான்மையோர் கிழக்கு மாகாணத்தவர்கள் என்று ஆதார மற்று பொய்செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. உண்மையில் மக்கள் டெலோவிற்கு தண்டனை வழங்கிய எமது நடவடிக்கையை ஆதரித்ததற்குக் காரணம் டெலோ இயக்கம் சமூக விரோதக் கும்பலாகச் செயல்பட்டதுடன், பொதுமக்களைத் துன்புறுத்தியும், மிரட்டியும் கணக்கற்ற குற்றங்களைச் செய்துள்ளனர் என்பதுதான். டெலோ ஒழுங்கு, கட்டுப்பாடுமற்ற ஒரு கும்பல். களவு, கொள்ளை, கடத்தல், அப்பாவி மக்கள் கொலை, இவையே இவர்களது செயல்முறையாக இருந்திருக்கிறது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முன்னாள் எம்.பிக்கள் இருவரைக் கொன்றதும் இவர்கள்தான். இந்துக் கோயில்களைக் கொள்ளையடித்ததும், நூற்றுக்கணக்கான வாகனங்களைக் கடத்திச் சென்றதும் இவர்களே. இத்தகைய சமூக விரோத அராஜகச் செயல்களே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் டெலோ மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. டெலோவின் இத்தகைய செயல்களே, அதற்கெதிரான விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கையை மக்கள் ஆதரிப்பதற்குக் காரணமாயிற்று. உள்ளூர் பத்திரிகைச் செய்திகளின் படி — மக்கள் மகிழ்ச்சியடைந்து சண்டையிலீடுபட்ட விடுதலைப் புலிகளுக்கு குளிர்பானம் வழங்கினார்கள் என்று தெரிகிறது.

இந்தியாவில் சமாதான முயற்சிகளை முறியடிக்கவே விடுதலைப் புலிகள் முன்கூட்டியே திட்டமிட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொண்டனர் என்ற UNI நிருபரின் கூற்று திரிக்கப்பட்ட, அப்பட்டமான பொய். இந்தியாவின் சமாதான முயற்சிகளை நாம் எப்போதும் ஆதரித்து வந்திருக்கிறோம். டெலோவால் எமது மூத்த உறுப்பினர்கள் கடத்தப்பட்டது. ஒருவர் கொலை செய்யப்பட்டது காரணமாகவே, எதிர்பாராத இச்சம்பவங்கள் நிகழ்ந்தன.

யாழ்ப்பாணத்தில் மர்மமான விதத்தில் தோன்றிய இந்திய எதிர்ப்புச் சுவரொட்டிகளுக்கும் எமக்கும் சம்பந்தம் உண்டு என்ற செய்தியை திட்டவட்டமாக மறுக்கிறோம். இந்திய அரசுக்கும் எமக்குமிடையே பிளவை ஏற்படுத்த முனையும் தீயசக்திகளே இந்தப் போஸ்டர்களை ஒட்டியிருக்க வேண்டும்.

எமக்கும் டெலோவிற்குமான கடந்த கால உறவுகளை சற்றே திரும்பிப் பார்ப்பது இன்றைய சூழ்நிலையை மேலும் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

தங்கதுரையும், பிரபாகரனும் சமகாலத்தில் (1971) அரசியலுக்கு வந்தவர்கள் அப்போது தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்பு இயங்கி வந்தது. வயதில் மூத்தவராக இருந்து வழிநடத்தியற்காக தங்கதுரையின் மேல் பிரபாகரன் எப்போதுமே மிகுந்த மரியாதை வைத்திருந்தார். சிலரது சிறுபிள்ளைத்தனத்தால் தமிழ் மாணவர் பேரவையை சிங்கள ஆட்சியாளர்கள் சிதறடித்தனர். அதன்பின் அனைவரும் செயலற்றிருந்த வேளையில் உரும்பராய் சிவகுமாரனும், பிரபாகரனுமே தொடர்ந்து போராட முன் வந்தனர். தகுதியும், துணிவும், திறமையுமிக்க வீரனை சிவகுமாரன் தன் குழுவில் இருந்தவர்கள் சிலரின் திறமையின்மை, கோழைத்தனம் காரணமாக களத்தில் எவ்வித சாதனையும் ஏற்படுத்த முடியாமல் இளைஞர்களின் எழுச்சிச் சின்னமாக வீரமரணமடைந்தான். செயலொன்றையே நோக்கமாகக் கொண்ட பிரபாகரன் 'புதிய தமிழ் புலிகள்' என்ற பெயரின் கீழ் சில இளைஞர்களுடன் இயங்கினர். 1976ல் செட்டி போன்ற குறுகிய நோக்கம் கொண்டவர்களை ஒதுக்கிவிட்டு திறன் கொண்ட சில இளைஞர்களை மேலும் சேர்த்து 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று இயக்கத்திற்கு புதிய பெயரிட்டு போராட்டத்திற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்தார்.

ஆரம்பத்தில் இயக்கத்திற்கென இருந்தது ஒரே ஒரு துப்பாக்கி. அதற்கான ரவைகளையும் தானே தயாரித்து தனது இருபதாவது வயதில் தன்னைவிட வயதில் குறைந்த இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தார் பிரபாகரன்.

தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பநாட்களில் (1971-1972) இளைஞர்கள் சிறுசிறு குழுக்களாக ஆயுத மேந்தி இனத்துரோகிகளை அழிக்க முற்பட்ட போதிலும் அவர்களது முயற்சி எதுவும் அப்போது வெற்றியடையவில்லை. அப்போது சிங்கள அரசின் கைக்கூலியாக, தமிழ் இளைஞர்களின் எழுச்சியை ஒடுக்குவதில் பிரதானமாக செயல்பட்டவர் யாழ்நகர மேயர் அல்பிரட் துரையப்பா. 1975ல் துரையப்பாவை சுட்டுக் கொன்றுவிட்டு அவரது காரையே எடுத்துக் கொண்டு பிரபாகரனும் அவரது தோழர்களும் வெற்றிகரமாகத் தப்பினார்கள். இதுதான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தாக்குதல்.

1975-78 ஆண்டுகளுக்கிடையில் இரகசியப் போலிஸ் குழுவை வெற்றிகரமாகத் தாக்கி அழித்தது, சிங்கள அரசின் அரசியல் சட்டத்தை எதிர்த்து விமானத்தைத் தகர்த்தது உட்படப் பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளைப் பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்.



1977ம் ஆண்டளவில் தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் மீண்டும் குழுவாக இயங்க ஆரம்பித்தனர். அப்போது அந்தக் குழுவிற்கு பெயர் எதுவுமில்லை. அவர்களுக்கு பொருளாதார, ஆயுத உதவிகளையும், பயிற்சிக்கான ரவைகளையும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் கொடுத்துதவினர் பிரபாகரன். தங்கத்துரை, குட்டிமணி குழுவினர் 1978ம் ஆண்டிற்கு பிறகுதான் தனித்தனியாக ஆறு போலிஸாரை சுட்டுக் கொன்றனர்.

1978ல் துப்பாக்கி சூட்டினல் காயமடைந்து கால் எலும்பு உடைந்திருந்த தங்கத்துரையையும், ஜெகனையும் மருத்துவமனையில் சேர்த்து மருத்துவ ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து காப்பாற்றினர் விடுதலைப்புலிகள். அவர்களது ஆபத்தான நிலை கருதி அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும், வசதிகளையும் செய்ய பத்து விடுதலைப் புலிகள் முழு நேரமாகச் செயல்பட்டனர். தங்கதுரையும், பிரபாகரனுக்கு சிக்கலான சில நிலைகளில் உதவியிருக்கிறார்.

சிறிசபாரத்தினம் 1980ம் ஆண்டின் ஆரம்பத்தில்தான் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரின் குழுவில் சேர்ந்தார். 1981ல் விடுதலைப்புலிகளும், தங்கத்துரை குழுவினரும் இணைந்து செயலாற்றினர். நீர்வேலி வங்கிக் கொள்ளை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தமிழகம் செல்லப் புறப்பட்ட தங்கத்துரையும் குட்டிமணியும் சிங்கள ஆயுதப் படையினரிடம் பிடிபட்டனர். பல்வேறு இடையூறுகளுக்கும் மத்தியில் பணத்தைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பை பிரபாகரன் ஏற்றுச் செயல்படுத்தினர்.

சிங்களச் சிறையில் அடைபட்டிருந்த தங்கத்துரை, குட்டிமணியை விடுவிக்கத் திட்டமிடுவதாக கூறி சிறி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் காலங்கடத்தி வந்தார். அவரது செயற்பாடுகளில் அதிருப்தியுற்ற பிரபாகரன் 1982ல் விடுதலைப் புலிகளோடு, அக்குழுவிலிருந்து பிரிந்து வந்து தமது செயல்களைத் தீவிரப்படுத்தலானர். அப்போது, கூட்டாகச் செயலாற்றிய போது எடுத்த நீர்வேலி வங்கிப் பணத்தையும், அந்தப் பணத்தைக் கொண்டு வாங்கிய ஆயுதங்களையும் அப்படியே சிறிசபாரத்தினத்திடம் பெருந்தன்மையாகக்கொடுத்தார். பெருந் தொகையான பணமும் ஆயுதங்களும் சிறியிடம் கொடுக்கப்பட்ட காலத்தில் அக்குழுவில் இருந்தவர்கள் ஆறு பேர் மட்டுமே. அந்த ஆறு பேரில் சிறிசபாரத்தினத்தைத் தவிர வேறு யாரும் சிறிசபாரத்தினத்துக்கு ஆதரவாக இல்லை பின்னர் சிலர் திட்டமிட்டு விலக்கப்பட்டனர். ஒருவர் சிறியால் நயவஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டார். மற்றவர்கள் சிறியின் செயல் கண்டு மனம் புழுங்கி ஒதுங்கினர்.

1982ல் குட்டிமணி, ஜெகனுக்கு தூக்குதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அது வரை குழுநிலையில் இயங்கி வந்த தங்கத்துரையின் இயக்கத்தை 'தமிழீழ விடுதலை இயக்கம்' (டெலோ) எனப் பெயரிட்டு தங்கத்துரையைத் தலைவர்

என்றும் குட்டிமணியை செயலதிபர் என்றும் சிறி சபாரத்தினம் பிரகடனப்படுத்தினர்.

ஏற்கனவே தமிழர் கூட்டணியின் இளைஞர் அமைப்பான தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து கருத்து வேற்றுமை காரணமாகப் பிரிந்த இளைஞர்கள் 1975ல் 'தமிழீழ விடுதலை இயக்கம்' என்ற பெயரில் ஒரு இயக்கத்தை நடத்தினர். 1976ல் புலோலிவங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட அந்த தமிழீழ விடுதலை இயக்கம் போலிஸாரால் முற்றாக வேட்டையாடப் பட்டதைத் தொடர்ந்து சிதைந்தது. வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட தங்க மகேந்திரன் உட்பட இரு தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்களுக்கு ஸ்ரீலங்கா நீதிமன்றத்தில் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன் பின் இயக்கம் இல்லாமல் போனது. தங்கத்துரையைத் தலைவராகவும், குட்டிமணியைச் செயலதிபராகவும் கொண்ட இயக்கமானது தமிழீழத்தில் ஒரே பெயர் கொண்ட இரண்டாவது இயக்கமாகும். இந்தக் குளறுபடிக்குக் காரணமாக இருந்தவர்கள் 'சிறிசபாரத்தினமும், முன்பிருந்த 'தமிழீழ விடுதலை இயக்கத்' தலைவர் தம்பித்துரை முத்து குமாரசாமியுமாவார்கள். தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரின் தொடக்ககால நிலைகளை மறைத்து அவர்களது செயல்பாட்டை தன் தலைமையின்கீழ் ஏற்கனவே இருந்த 'தமிழீழ விடுதலை இயக்கம்' என்ற பெயரின் கீழ் கொண்டு வருவதில் வரலாற்று மயக்கத்தை ஏற்படுத்தி சுயலாபம் தேட முனைந்தார் தம்பித்துரை முத்துக்குமாரசாமி. அதற்குத் துணை போனவர் சிறி சபாரத்தினம்.

தங்கத்துரை குழுவில் இருந்தயாரும் சிறிசபாரத்தினத்தின் புதிய டெலோவில் இருக்கவில்லை. தூக்கு தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டு சிறையில் இருந்த குட்டிமணி, ஜெகன் பேரில் ஏற்பட்ட அனுதாபத்தைப்பயன்படுத்தி இயக்கத்தைப் பிரபலப் படுத்தினார்களே தவிர விரர்களை வெளியே எடுக்கும் நடவடிக்கையில் இறங்கவில்லை. டெலோவில் புதிதாகச் சேர்ந்தவர்கள் யாரும் தங்கத்துரையை நேரடியாக அறியாதவர்களாதலால் அதில் அவர்களுக்கு மனப்பூர்வமான ஈடுபாடில்லை. இயக்கங்களின் ஒற்றுமை பற்றிப் பேச முன் வந்த அருளரிடம் பிரபாகரன், தனது நண்பர்களை சிறையிலிருந்து மீட்க டெலோவுடன் இணைந்து விடுதலைப்புலிகள் இயக்கம் இராணுவ நடவடிக்கை எடுக்கத்தயார் என்று மனப்பூர்வமாக கூறியதுடன் அதிகாரபூர்வமான கடிதமும் கொடுத்தார். ஆனால் தங்கத்துரை, குட்டிமணியின் மேல் போலி மரியாதை வைத்திருந்த சிறிசபாரத்தினம் அதற்கு முன்வரவில்லை.

1983ம் ஆண்டு இன வெறித் தாக்குதலுக்குப்பின் ஏற்பட்ட இளைஞர் இயக்கங்கள் பெருமளவில் ஆள் சேர்ப்பதில் இறங்கின. விடுதலைப்புலிகளைவிட அதிக அளவில் ஆள் பிடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் சிறிசபாரத்தினம் கண்ணில் கண்டவர்களையும் கையில் சிக்கியவர்களையும் எடுத்து இயக்கத்தில் போட்டுக்கொண்டார். ஆள் எண்ணிக்கையில் டெலோதான் பெரியது என்று வெளி உலகுக்குக் காட்டி பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொண்ட சிறி விடுதலைப் போராட்டத்தில் எவ்வித ஈடுபாடும் காட்டவில்லை.

85 வரை தமிழீழத்தில் டெலோவின் துப்பாக்கி வெடிச்சத்தம் ஒன்று கூடக் கேட்கவில்லை.

அப்போது விடுதலைப் புலிகள் மட்டுமே தமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தனர். டெலோ உட்பட எல்லா இயக்கங்களும் விடுதலைப்புலிகளின் கெரில்லாப் போராட்டத்தைக் கடுமையாக விமர்சித்தன. கூடாது என்று குறை கூறின. மாற்று வழி தெரியாமல் மௌனம் சாதித்தன. ஆனால் விடுதலைப் புலிகளுக் கெதிராக எல்லா இயக்கங்களும் பிரசாரத்தில் ஈடுபட்டன. போராட்ட அலுவல்களில்லாமல் ஒய்வாக இருந்ததால் தமது விதம் விதமான பிரச்சாரங்களை முடுக்கி விட்டிருந்தனர்.

டெலோவில் 'ANTI TIGERS' என்ற பெயரில் பயிற்சி வகுப்புகளே நடந்தன. புதிதாகச் சேர்ந்த அப்பாவித் தமிழ் இளைஞர்களிடம், விடுதலைப் புலிகளுக்கும் தங்கத்துரை குழுவிற்குமிடையே இருந்த நல்லுறவுகள் மறைக்கப்பட்டன. பிரபாகரன் மீது வெறுப்பு ஏற்படும் அளவுக்கு பாடம் புகட்டப்பட்டது.

பெரும் எண்ணிக்கையில் ஆட்களை வைத்துக் கொண்டு, செயல்பாடு அறவே இல்லாமல் கட்டுப்பாடின்றி டெலோ காலந்தள்ளி வந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் டெலோவின் பங்கு : விடுதலைப்புலிகளின் கெரில்லாப் போர் முறையைக் குறை கூறி டெலோவினர் தாம் 'சும்மா' இருந்தால் மக்களிடம் தலைகாட்ட முடியாத நிலை ஏற்பட்டதும் ஏதாவது செய்ய வேண்டுமென்று முடிவெடுத்தனர். தாஸ் தலைமையில் தாக்குல்கள் நடந்தன.

1. சாவகச்சேரி போலிஸ் நிலையத்தைத் தாக்கித் தகர்த்தனர்.
2. முறிகண்டியில் ரயில்வண்டி மீது தாக்குதல் நடத்தி சில வாகன்களை அழித்தனர்.
3. கொக்காவில், இயக்கச்சி, வவுனியா போன்ற இடங்களில் தாக்குதல் நடத்த முயன்று அது வெற்றியடையவில்லை. (இவற்றையும் மிக வெற்றிகரமான தாக்குதல்கள் என்று மிகைப்படுத்தியிருக்கிறார்கள்.)

இவற்றை தவிர டெலோ தமிழீழத்தில் இராணுவத்துக் கெதிராக எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை. இவர்களது பிரசித்தி பெற்ற மற்ற Field கள் மக்களுக்கு எதிராகத்தான். முறிகண்டி தாக்குதலில் இவர்களுக்குக் கிடைத்த வெற்றியை பல மடங்கு மிகைப்படுத்தி வெளியே காட்டிக் கொண்டு காலந்தள்ளினர்.

தமிழீழப் போராட்டத்தில் 'விடுதலை வீரர்' சிறி சபாரத்தினத்தின் பங்களிப்பு :

இதுவரை சிறி சிங்கள இராணுவத்துக்கெதிராக நடந்த எந்தவொரு தாக்குதலிலும் இணைந்து செயல்படவில்லை. (சிறி சபாரத்தினம் தமிழீழத்தில் நின்று போராடுகிறார் என்று அண்மையில் சில விளம்பரப் படங்களை டெலோவினர் பத்திரிகையில் வெளியிட்டனர்) 1981ம் ஆண்டிற்குப் பிறகு அவர் இரண்டு தடவை தமிழீழம் சென்றிருக்கிறார். அப்போது அவர் ஆயுதம் தூக்கியதெல்லாம் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக .மட்டும்தான். முதல் தடவை 1982ல் சென்றபோது தங்கத்துரை குழுவினருடன் இயங்கிய ஜெயம் என்ற இளைஞரைச் சுட்டுக் கொன்றார். 1986 மார்ச்சில் சென்ற போது தன்னோடு இயங்கிய தாஸை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். மருத்துவமனையில் வைத்து தாஸும், மேலும் மூன்று இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். தாஸ் கொலையைக் கண்டித்து பொதுமக்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர். ஏப்ரல் 29ம் தேதி எமது இயக்கத்தின் காப்டன்லிங்கம் சிறியின் முகாமுக்கு பேச்சுவார்த்தைக்குச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

டெலோவிற்குள் அதிருப்தி, விரக்தி, காரணமாக எழுந்த எதிர்ப்புக் குரல்களைக் குரூரமான முறையில் நசுக்கியவர் சிறி. விளைவாக கணிசமான இளைஞர்கள் போராட்ட களத்திலல்லாமல் தமிழக மண்ணில் வீர மரணமடைந்தனர்.

ஈழ தேசிய விடுதலை என்று விடுதலைப்புலிகளுடன் கைகோர்த்துக் கொண்டு விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்திய அரசுக்கு வெறுப்பு ஏற்படுத்த சிறிசபாரத்தினம் சதித்திட்டம் தீட்டினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரைக் கொலை செய்துவிட்டு விடுதலைப் புலிகள் தான் செய்தார்கள் என்று கதையைப் பரப்பினார்.

---

*எம்மால் 14.5.86 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை.*

*அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் டெலோ இயக்கத்திற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையின் போது டெலோ உறுப்பினரான, கோப்பாய் தெற்கை சேர்ந்த பழனிவேல் தங்கராஜா (இயக்கப் பெயர் பாலா) என்பவர் பிடிபட்டார். விடுதலைப் புலிகளால் அவர் தீர விசாரிக்கப்பட்டார். 2.9.85 அன்று த.ஐ.வி.கூ. ஐச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு தர்மலிங்கம், திரு ஆலால சுந்தரம் ஆகியோரின் கொலைகளில் தான் பங்குபற்றியதை ஒப்புக்கொண்டார். த.ஐ.வி.கூ. யின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கொல்லும் படி டெலோ தளபதிகளில் ஒருவரான பொபி என்பவர் தங்களுக்கு கட்டளை பிறப்பித்ததாகவும் பொபியிடம் தாங்கள் காரணம் கேட்ட போது ''இது தலைமைப் பீடத்தின் முடிவு, இது ஒரு அரசியல் தந்திரம் விளக்கம் தேவையில்லை'', என்று பொபி கூறியதாகவும் அவர் கூறினார். அவரது வாக்குமூலத்தில் மேலும் கூறியது: ''இக்கொலைகளுக்கு வலன்டைன் தலைமை தாங்கினார். நான், சிட்டிபாபு, ரஞ்சித் ஆகியோர் பங்குபற்றினோம். சம்பவம் நடந்த அன்று வல்வெட்டியில் இருந்த எமது முகாமில் பழுப்பு நிற மொரிஸ் ஒக்ஸ் போட் கார் எம்மிடம் தரப்பட்டது. இக்கார் சம்பவ் தினத்திற்கு முதல் நாள் கிருபா என்பவரால் எங்கிருந்தோ கடத்திக்கொண்டு வரப்பட்டது.*

*அக்காரில் நாம் நால்வர் மாலை 7.30 மணியளவில் ஆலால சுந்தரத்தின் வீட்டுக்குச் சென்றோம். பாஸ்போர்ட் விடயமாக அவருடன் பேச வேண்டும் என்று கூறினோம். வெளியே வந்த அவரை பலவந்தமாக ஏற்றிக்கொண்டு தர்மலிங்கம் வீட்டுக்குச் சென்றோம். ''ஆலால சுந்தரம் உங்களுடன் கதைப்பதற்கு வந்துள்ளார்'' என்று தர்மலிங்கத்திடம் கூறி அவரையும் காரில் ஏற்றினோம். அவர்களை அழைத்துச் சென்று 8 அல்லது 8.30 மணியளவில் கோண்டாவில் சென்றடைந்தோம். தர்மலிங்கத்தை சிட்டிபாபுவுடன் அங்கு இறக்கி விட்டு ஆலால சுந்தரத்தை நல்லூர், ராஜவீதிச் சந்திக்கு கொண்டு சென்றோம். ஜன நடமாட்டமற்ற ஒதுக்குப்புறத்தில் ஆலால சுந்தரத்தின் கண்களைக் கட்டி நானும் வலன்டைனும் சுட்டுக்கொன்றோம். பின்னர் திரும்பி வந்து தர்மலிங்கத்தை ஏற்றிக் கொண்டு தாவடி றோட்டில் தோட்ட வெளிக்கு அழைத்துச் சென்றோம். அவரையும், சிட்டிபாபு சுட்டுக் கொன்றார். பின்னர் அவர்ளது உடல்களை அவர்களது பாராளுமன்ற தொகுதிகளுக்குக் கொண்டு போய் போட்டோம்.*

*பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் ''துரைரத்னம் தூர இருந்ததால் அன்று இரவு வரை கொல்லமுடியாமல் போய்விட்டது. நீலன் திருச்செல்வத்தைக் கொல்லவும் ஆயத்தங்கள் நடந்ததாக நான் அறிந்தேன். இக்கொலைகளுக்கு ஒரு எஸ்.எம்.ஜி., இரண்டு ஏ.கே 47 ஆகிய இயந்திரத் துப்பாக்கிகளை பயன்படுத்தினோம்.''*

*இக்கொலைகளுக்கான பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டது. அன்று நாம் அக்குற்றச்சாட்டை மறுத்தோம், இன்று ஆதாரபூர்வமாக உண்மையை வெளிக் கொண்டு வருகிறோம். கொலை செய்யப்பட்ட த.ஐ.வி.கூ. வினருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட இரங்கல் கூட்டங்களில் டெலோ இயக்கத்தினரும் பங்கு பற்றி தமது அனுதாபத்தை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. ஈ.என்.எல்.எப். புடன் நாம் கூட்டாக இயங்கிய போதே டெலோ இயக்கம் இப்படுகொலைகளை புரிந்து விட்டு எம்மீது பழியைப் போட்டது''.*

டெலோவின் அரசியல் பிரிவால் இப்போது தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவர்களது உணர்ச்சிபொங்கும் வசவுகளையும், தப்புந்தவறுமான தமிழையும் தாண்டி வந்தால் பொருட்படுத்தி பதில் சொல்லத் தக்க விஷயங்களாக மிஞ்சுபவை :

1. டெலோ முகாம்களின் மீது திட்டமிட்ட தாக்குதல்.
2. பதவிவெறி கொண்டு விடுதலைப் போராட்டத்தில் தலைமைப் புள்ளிகளைக் கொலை செய்ய முயற்சிக்கின்றனர்.
3. விடுதலைப்புலிகள் தாம் அடித்த கொள்ளைகளுக்கு டெலோ மீது பழி சுமத்தினர்.

முதலில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயல்களை சில வரிகளில் தெளிவாக வரையறுக்கலாம்.

'பூர்ஷ்வா', 'தோழர்' போன்ற வார்த்தைகளை உச்சரிக்கத் தெரிந்தால் ஒருவன் கம்யூனிஸ்டாகப் பெயரெடுக்க முடிகிற சூழலில் 'விடுதலை இயக்கம்' என்ற பெயரையும், தூசி படிந்த துப்பாக்கிகளையும் காட்டித் காலந்தள்ள முடிவது ஆச்சரியமல்ல. 'விடுதலை' என்பது வார்த்தையில் அல்ல, செயலில் வேண்டும். ஆனால் இவர்களது செயல்களோ மக்களிடம் கொள்ளையடித்து தம் சொந்த வசதிகளைப் பெருக்கிக் கொள்வதிலேயே குறியாய் இருந்திருக்கிறது. தமிழீழப் போராட்டத்தைத் தமது சுய லாபங் களுக்குத் திசை திருப்பத் துடிக்கும் சகல விதமான பிற்போக்கு சக்திகளின் பகடைக்காயாக டெலோவின் தலைமைப் பீடம் செயல்பட்டு வந்திருக்கிறது. தமிழீழப் போராட்டத்தின் தலை விதியைத் தீர்மானிக்கும் சக்தியாக எமது இயக்கம் இருந்து வந்திருப்பதாலும், நாமே எமது மக்களின் பாதுகாவலர்கள் (எமது செயல்கள் இதை நிரூபிக்கின்றன) என்பதாலும் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு எமக்குப் பூரண உரிமை உண்டு.

எமக்கு எமது சொந்தச் சகோதரர்களின் மீது எவ்விதக் குரோதமும் இல்லை. எம்மிடம் சரணடைந்த 400க்கு மேற்பட்ட இளைஞர்களை கண்ணியமாக நடத்தி, அவர்களை வீடு திரும்பச் செய்திருக்கிறோம்.

சுந்தரம் இயக்கத்திற்குச் செய்த துரோகத்திற்கும், ஆயுதங்களை வஞ்சகமாக கடத்திச் சென்றதற்கும், ஒபரோய் தேவன் சமூக விரோதச் செயல்களுக்காகவும் எம்மால் மரணதண்டனை நிறை வேற்றப்பட்டவர் கள்.

'விடுதலைப்புலிகள் கொள்ளையடித்தார்கள்' என்று தமிழீழ மக்களிடம் போய் சொன்னால் கிடைக்கும் பதில் வேறு விதமாக இருக்கும். (மேலும் கோவில் கொள்ளையை விடுதலைப் புலிகள் மீது சுமத்தினால் EPRLFகாரர்கள் கோபித்துக் கொள்வார்கள் — தங்கள் fieldஐ மாற்றிக் claim பண்ணிவிட்டினம் என்று) டெலோ



கொள்ளையடித்த பொருட்களில் வாகனங்கள் மட்டும் 81 (எண்பத்தி ஒன்று) — அவற்றின் உரிமையாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

நடந்த பிரச்னையில் முழுமையாகச் சம்பந்தப்பட்டிருக்கும் தமிழீழ மக்கள் எமது இயக்கத்திற்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதை வீரகேசரி பத்திரிகைச் செய்திகளும், B.B.C. செய்தி விமர்சனமும் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக EPRLF 10ந் தேதி அறிவித்திருந்த ஹர்த்தால் மக்களால் நிராகரிக்கப்பட்டிருக் கிறது. EPRLF 11ந் தேதி மா னிப்பாயில் இருந்து நடத்திய ஊர்வலத்தில் பொதுமக்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை.

டெலோ இயக்கத்தின் மீது நாம் இந்த கடும் இராணுவ நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டதற்கு வேறு காரணங்களும் உண்டு. டெலோ அமைப்பைத் தளமாகவைத்து, அமெரிக்க நாசகார உளவு ஏஜன்சி சி. ஐ. ஏயுடன் தொடர்புடைய எதிர் புரட்சி சக்திகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தலையிட்டு வந்தன. சர்வதேசரீதியான தகவல் அமைப்புகளையும் நிதி அமைப்புகளையும் கொண்ட இந்தப் பிற்போக்கு சக்திகள் சென்னையில் தளம் அமைத்து டெலோவுக்கு முண்டுகொடுத்து வந்தன. டெலோவின் அரசியல் மூளையாகவும் நிதி வங்கியாகவும் செயல்பட்ட இந்த சக்திகள் டெலோவை அத்திவாரமாகக்கொண்டு தமிழீழத்தில் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற திட்டமிட்டிருந்தன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்த அமெரிக்கச் சார்பு சக்திகளின் ஊடுருவல் புரட்சிகர முற்போக்கு இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்தது. ஏனென்றால் டெலோ இயக்கத்தை இராணுவரீதியாக வளர்த்து புலிகளை ஒழித்துக்கட்டுவதும் இந்த நாசகார சக்திகளின் சதித்திட்டமாக இருந்தது. ஆகவேதான் டெலோ மீது நாம் எடுத்த இந்த இராணுவ நடவடிக்கை இவர்களுக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்திருக்கிறது. எமது இயக்கத்தின்மீது பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டு எம்மீது மாசு கற்பிக்க இவர்கள் முனைந்து வருகிறார்கள்.

டெலோ இயக்கமானது விடுதலைப் பாதையிலிருந்து விலகி ஒரு சமூக விரோத பிற்போக்கு சக்தியாக செயல்பட்டது என்பதையும், இதனால் விடுதலைப் புலிகளுக்கும்டெலோ அமைப் பிற்கும் முரண்பாடு முற்றி தவிர்க்கமுடியாத ஒரு மோதலாக வெடித்தது என்பதையும் ஆதாரபூர்வமாக, வரலாற்றுக் கண் ணோட்டத்துடன் இப்பிரசுரத்தில் விளக்கியிருக்கிறோம். இப்பிரச்னை யால் குழப்பமடைந்திருப்போருக்கு இப்பிரசுரம் தெளிவை ஏற்படுத்தும் என்று நம்புகிறோம்.

12-3-1986 அன்று தமிழ் ஈழ விடுதலை இயக்கப் பிரிவினரால் விநியோகம் செய்யப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
## Thamil Eelam Liberation Organization

TELO

### அராஜக கும்பல்களை
# வெளியேற்றுவோம்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஸ்தாபன மோதல்களை வன்மையாக கண்டித்து வந்த நாம், ஸ்தாபனங்களின் ஐக்கியத்திற்காக முன்னின்றும் செயலாற்றி வந்தோம். அவ்வாறு செயற்பட்டு வந்ததன் விளைவே ஈழத் தேசிய விடுதலை முன்னணியாகும். மிகக் குறைந்த பட்ச நிபந்தனைகளுடன் உருவான ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் மோதல்கள் உருவானதும், அவை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டதும் மக்கள் அறிந்தவை.

எனவே தான் எம் ஸ்தாபனத்திற்குள் ஏற்பட்ட குழப்ப நிலைகளையும் மக்கள் முன் வைக்க எண்ணியுள்ளோம். சில தனி நபர்களினதும், குட்டி முதலாளிகளினதும் மார்க்ஸிஸ வாதிகள் எனக் கூறிக் கொள்ளும் சிவம், சிவராஜா, ரத்தினம் போன்றோரினதும் தவறான பாதைக்கு எமது தோழர் தாஸ் இட்டுச் செல்லப்பட்டிருந்தார். அவர்களின் ஆலோசனைப்படி 1984 ம் ஆண்டு பங்குனி மாதம் முதல் தொடர்ச்சியாக பல கொள்ளைகள், கொலைகள் தாஸ் குழுவினரால் மேற் கொள்ளப்பட்டன இக் கொள்ளைகள் அவர்களின் சுக போக வாழ்விற்காகவும் எம் ஸ்தாபனத்தின் பேரில் களங்கத்தை ஏற்படுத்தவுமே மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் சில:

(1) தொடர்ச்சியான ஏழு சாராய லொறிக் கொள்ளைகள்.
(2) யாழ் கூட்டுறவு சிகரட் வான் கொள்ளை.
(3) லொறிகளில் வந்த உணவுப் பொருட்கள் கொள்ளை
(4) கொக்குவில் பல் தொழில் நுட்பக் கல்லூரியில் லேத், இயந்திரம் கொள்ளை
(5) சுழிபுரம் ராஜசுந்தரம் கொலை
(6) மல்லாகம் தேசிகநாதன் கொலை
(7) கிளிநொச்சி B.M.C ஊழியர் கொலை
(8) கல்வியங்காடு ரஜனி கொலை
(9) S.V.M சீனி லொறி இரண்டு கொள்ளைகள்
(10) பல பெற்றோல், டீசல் லொறிகள் கொள்ளைகள்,
(11) வேகடாச்சம், செல்லப்பாவின் மருமகன் சிறு ஆகியோரை கடத்தி பணம் பறித்தமை. இவை போன்று இன்னும் பல.....

இவ்வாறான சம்பவங்கள் ஸ்தாபனக் கட்டுப்பாட்டை மீறியே இவர்களால் நடாத்தப்பட்டது. இவை நடைபெற்றும் இவர்களை எம் கட்டுப் பாட்டிற்குள் உட் படுத்தி திருத்த முடியும் என எதிர் பார்த்தோம். எனவே தான் தொடர்ச்சியாக 2 மாதங்களுக்கு மேலாக இவர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடு பட்டோம். ஆனால் அண்மைக் காலமாக பேச முற்பட்ட போதெல்லாம் எம்மை அலட்சியப்படுத்தி வந்துள்ளனர்.



VIRAKESARI
# வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

## யாழ். குடாநாட்டில் இனம் புரியாத அமைதி! மீட்கப்பட்ட வாகனங்கள் யாழ்நகரில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைப்பு!

வீதிகளில் புலி இயக்கத்தினர் காவல்: நடமாட்டமும் அதிகரிப்பு

## வடக்கில் கொள்ளை சம்பவங்கள் குறைந்தன
### மக்கள் நிம்மதிப் பெருமூச்சு

(யாழ். அலுவலக நிருபர்)

கடந்த சில தினங்களாக வடக்கில் வாகனக் கடத்தல், விடுதலைப்பு, கொள்ளை சம்பவங்கள் நடைபெறவில்லை. இதனால் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

வழமைக்கு மாறாக மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் வீதிகளில் காணப்படுகின்றன.

● காத்தான்குடி முஸ்லிம்களிடம் கொள்ளையிட்ட

## 'டெலோ' இயக்க அங்கத்தினர் ஒன்பது பேர் சுட்டுக் கொலை!

(காத்தான்குடி நிருபர்)

அண்மைக்காலமாக காத்தான்குடி முஸ்லிம் மக்களின்

● தமிழீழ விடுதலைப் புலிகளே கொன்றன

பொருட்களையும் அங்குள்ள ஸ்தாபனங்களின் பொருட்களையும் கொள்ளையிட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் டெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஒன்பது தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இன ஐக்கியத்தை விரும்பும் முஸ்லிம் மக்களின் சொத்துக்களைக் கொள்ளையிட்டு அவர்களைக் கடத்தும் முயற்சியிலும் ஈடுபட்டதாக டெலோ இயக்கத்தினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் நேற்று மாலையில் மட்டக்களப்பிலிருந்து நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளே இவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

## டெலோ' கடத்திய வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு
### மயிலிட்டியில் கிரனேற் வீச்சு

## புலிகளின் "கண்காட்சியில்" வவுனியா வாகனங்கள்

(கேசரி நிருபர்)

தகர் ஒருவரின் 'எல்ப்' ரக

தமிழீழப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிநிலைக்கு எமது இயக்கமே காரணம். இதுவரை தமிழீழத்தில் அரச படைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஒருசிலவற்றைத் தவிர அனைத்தையும் எமது இயக்கமே செய்துள்ளது. இதற்காக இருநூறுக்கும் மேற்பட்ட எமது வீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர்.

---

1985வரை தமிழீழத்தில் டெலோவின் துப்பாக்கி வெடிச்சத்தம் ஒன்று கூடக் கேட்கவில்லை.

---

டெலோவிற்குள் அதிருப்தி, விரக்தி காரணமாக எழுந்த எதிர்ப்புக் குரல்களைக் குரூரமான முறையில் நசுக்கியவர் சிறி சபாரத்தினம், விளைவாக, கணிசமான இளைஞர்கள் போராட்ட களத்திலல்லாமல் தமிழக மண்ணில் வீர மரணமடைந்தனர்.

---

'பூர்ஷ்வா', 'தோழர்' போன்ற வார்த்தைகளை உச்சரிக்கத் தெரிந்தால் ஒருவன் கம்யூனிஸ்டாகப் பெயரெடுக்க முடிகிற சூழலில், 'விடுதலை இயக்கம்' என்ற பெயரையும் தூசிபடிந்த துப்பாக்கிகளையும் காட்டிக் காலந்தள்ள முடிவது ஆச்சரியமல்ல. 'விடுதலை' என்பது வார்த்தையில் அல்ல, செயலில் வேண்டும். ஆனால் இவர்களது செயல்களோ மக்களிடம் கொள்ளையடித்து தமது சொந்த வசதிகளைப் பெருக்கிக் கொள்வதிலேயே குறியாய் இருந்திருக்கிறது. தமிழீழப் போராட்டத்தைத் தமது சுயலாபங்களுக்குத் திசை திருப்பத் துடிக்கும் சகல விதமான பிற்போக்கு சக்திகளின் பகடைக்காயாக டெலோவின் தலைமைப் பீடம் செயல்பட்டு வந்திருக்கிறது. தமிழீழப் போராட்டத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியாக எமது இயக்கம் இருந்து வந்திருப்பதாலும், நாமே எமது மக்களின் பாதுகாவலர்கள் (எமது செயல்கள் இதை நிரூபிக்கின்றன) என்பதாலும் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு எமக்குப் பூரண உரிமை உண்டு.

---

எமது நோக்கம் டெலோவை நிர்மூலமாக்குவதல்ல; அவர்களை நிராயுதபாணிகளாக்குவதே.

---

ஒரு முற்போக்கான புரட்சிகர சக்திக்கும், ஒரு பிற்போக்கான எதிர்ப்புரட்சி சக்திக்கும் மத்தியில் முரண்பாடு தோன்றுவது வரலாற்று நியதி. உலக தேசிய விடுதலைப் போராட்டங்களில் இது சகஜமான நிகழ்வு. இந்த முரண்பாடுகள் ஆயுத மோதலால் தீர்வு காணப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.